# 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு புகைப்பிடித்தலையும் எச்சில் உமிழ்வதையும் தடைசெய்யும் சட்டம்

## (தமிழ்நாடு சட்ட எண் 4/2003)

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

# The Tamil Nadu Prohibition of Smoking and Spitting Act, 2002

## (Tamil Nadu Act No.4 of 2003)

(as on 31st October, 2023)

தமிழாக்கம் :

தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்

சென்னை

தமிழ்நாடு அரசுக்காகத் தமிழ்நாடு அரசு எழுதுபொருள் அச்சுத்துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

2023

# 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு புகைப்பிடித்தலையும் எச்சில் உமிழ்வதையும் தடைசெய்யும் சட்டம் (தமிழ்நாடு சட்ட எண் 4/2003)

பிரிவு பொருளடக்கம்


1. குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம்.
2. பொருள்வரையறைகள்.
3. பொதுப்பணியிடங்களை அல்லது பொதுப் பயன்பாட்டிற்கான இடங்களை விளம்புதல்.
4. பொதுப்பணியிடங்களிலும், பொதுப் பயன் பாட்டிற்கான இடங்களிலும் புகைப்பிடித்தலும் எச்சில் உமிழ்தலும் தடைசெய்யப்படுதல்.
5. பொதுமக்கள் சேவைக்கான ஊர்தியில் புகைப்பிடித்தலும் எச்சில் உமிழ்தலும் தடை செய்யப்படுதல்.
6. புகைப்பிடித்தல் மற்றும் புகையிலை சுவைத்தல் குறித்த விளம்பரம் தடைசெய்யப்படுதல்.
7. சிகரெட் முதலானவற்றைச் சேமித்து வைத்தல், விற்பனை செய்தல், பங்கீடு செய்தல் ஆகியன தடைசெய்யப்படுதல்.
8. அறிவிப்புப் பலகையை நிறுவி காட்சிக்கு வைத்தல்.
9. பணத்தண்டம்.
10. நபர் எவருக்கும் இந்தச் சட்டத்தின்படி செயலாற்றும் அதிகாரமளிக்க அரசுக்குள்ள அதிகாரம்.
11. பிரிவு 10இன்படி அதிகாரம் அளிக்கப்பட்ட நபர் பொது ஊழியராதல் வேண்டும்.

12. மீறுபவர்களை வெளியேற்றும் அதிகாரம்.

13. குற்றச்செயல்களை விசாரணைக்கு. எடுத்துக்கொள்ளுதல்.

14. இந்தச் சட்டத்தின்படியான குற்றச்செயல்களுக்குச் சுருக்கு முறையில் விசாரணை செய்யப்படுதல் வேண்டும்.

15. அதிகார ஒப்படைவு.

16. குற்றச்செயல்களை இணக்கமாகத் தீர்த்தல்.

17. நிறுமங்களால் செய்யப்படுகின்ற குற்றச்செயல்கள்.

18. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

# 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு புகைப்பிடித்தலையும் எச்சில் உமிழ்வதையும் தடைசெய்யும் சட்டம்
# தமிழ்நாடு சட்ட எண் 4/2003

[தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது 2003ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28ஆம் நாளன்று குடியரசுத்தலைவரின் ஏற்பிசைவைப் பெற்றுப் பொதுத்தகவலுக்காகத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது.]

**தமிழ்நாடு மாநிலத்தில் பொதுப்பணியிடத்திலோ அல்லது பொதுப்பயன்பாட்டிற்கான இடத்திலோ மற்றும் மக்கள் சேவைக்கான ஊர்தியிலோ, புகைப்பிடித்தலையும் எச்சில் உமிழ்வதையும் தடைசெய்வதற்கும் அதனோடு தொடர்புடைய பொருட்பாடுகளுக்கும் வகை செய்வதற்கான ஒரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் ஐம்பத்து மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் இயற்றப்பட்ட சட்டம் பின்வருமாறு :—

**1. குறுந்தலைப்பு, பரப்பெல்லை மற்றும் தொடக்கம்.—** (1) இந்தச் சட்டம், 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு புகைப் பிடித்தலையும் எச்சில் உமிழ்வதையும் தடைசெய்யும் சட்டம் என வழங்கப்படும்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் பரவி நிற்கும்.

(3) இது, அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிப்பிடக்கூடிய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்:

**வரம்புரை:** இந்தச் சட்டத்தின் வெவ்வேறு வகைமுறைகள் வெவ்வேறு தேதிகளில் நடைமுறைக்கு வரும் படி குறிப்பிடப்படலாம் என்பதோடு, இந்தச் சட்டத்தின் தொடக்கம் என்பதாக வகைமுறை எதிலும் உள்ள குறிப்பு எதுவும், அந்த வகைமுறை நடைமுறைக்கு

வருவதைக் குறிக்கின்ற பொருள் எனக் கருதப்படுதல் வேண்டும்.

**2. பொருள்வரையறைகள்.–** இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி,–

(a) "விளம்பரம்" என்பது, புகைப்பிடித்தலை அல்லது புகையிலை மெல்லுதலை, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஊக்குவிக்கின்ற விளைவை ஏற்படுத்தும் அறிவிப்பு, சுற்றறிக்கை, சுவரொட்டி, துண்டறிக்கை, விளம்பரப் பலகைகள் மீது காட்சிக்கு வைத்தல் அல்லது ஒளி, ஒலி, புகை, வாயு ஆகியவற்றால் கண்ணுக்குப் புலப்படக்கூடிய வகையில் அமைக்கப்பட்ட காட்சிப் பொருள் மூலமாகவோ அல்லது வேறு முறையிலோ காட்சிக்கு வைத்தல் என்பதனை உள்ளடக்கி அவ்வாறே பொருள்படும்; மற்றும் "விளம்பரம் செய்" என்னும் சொற்றொடரானது அவ்வாறே பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்;

(b) "அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர்" என்பது, பிரிவு 10இன்படி அதிகாரம் அளிக்கப்பட்ட நபர் ஒருவர் எனப் பொருள்படும்;

(c) "அரசு" என்பது, மாநில அரசு எனப் பொருள்படும்;

(d) "பொதுப்பணியிடம் அல்லது பொதுப் பயன் பாட்டிற்கான இடம்" என்பது, பிரிவு 3இன்படி விளம்பப்பட்ட இடம் எனப் பொருள்படுவதோடு, அரங்கம், மருத்துவமனைக் கட்டடங்கள், பொது சுகாதார நிலையங்கள், திரையரங்கு, கருத்தரங்கு அல்லது மாநாட்டு அரங்குகள், கேளிக்கை மையங்கள், சிற்றுண்டிச் சாலைகள், உணவகங்கள், வணிக அமைப்பிடங்கள், பொது அலுவலகங்கள், நீதிமன்றக் கட்டடங்கள், கல்வி நிலையங்கள், பூங்காக்கள், நூலகங்கள், விளையாட்டு வளாகங்கள், பேருந்து நிலையங்கள், பேருந்து

நிறுத்தங்கள், கடற்கரைகள், கடைவீதிகள், உள்ளாட்சி அமைப்புகள், சட்டப்பூர்வமான அமைப்புகள், கூட்டுறவு நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து அரசு அலுவலகங்கள் மற்றும் சமயம் தொடர்பான இடங்கள் மற்றும் பொதுமக்கள் வந்து போகும் இவை போன்ற இடங்கள் ஆகியனவற்றை உள்ளடக்கும்; ஆனால் திறந்த வெளியிடம் எதனையும் உள்ளடக்காது;

(e) "பொதுமக்கள் சேவைக்கான ஊர்தி" என்பது, 1988ஆம் ஆண்டு இயக்கூர்திகள் சட்டத்தின் (மையச் சட்டம் 59/1988) பிரிவு 2இன் பிரிவின் (35)ஆம் கூறில் பொருள்வரையறை செய்யப்பட்டவாறான ஓர் ஊர்தி எனப் பொருள்படும்;

(f) "சமயம் தொடர்பான இடம்" என்பது, சமய வழிபாடு செய்யப்படும் பொது இடமாகப் பயன்படுத்தப்படும் கோயில், கிருத்துவ ஆலயம், மசூதி, மடம் அல்லது அது எந்தப் பெயரில் அழைக்கப்பட்டாலும் அத்தகையதோர் இடம் எனப் பொருள்படும்;

(g) "புகைப்பிடித்தல்" என்பது, குழல், சுருட்டிய மேலுறை அல்லது பிற கருவி எதன் உதவியுடனும் சிகரெட், சுருட்டு, பீடி அல்லது பிற வடிவத்தில் புகையிலையைப் புகையாகப் பிடித்தல் எனப் பொருள்படும்;

(h) "எச்சில் உமிழ்தல்" என்பது, புகையிலை, பான்மசாலா, குட்கா, பாக்கு சேர்த்த வெற்றிலை எந்த உருவத்திலும் அல்லது புகையிலைத் தயாரிப்பு அல்லது புகையிலை அடங்கிய பொருள்கள் எதனையும் மென்று பின்னர், தெரிந்தே வாயிலிருந்து எச்சிலை உமிழ்தல் அல்லது மூக்குப் பொடியை உள்ளிழுத்துவிட்டு மூக்கு வழியே அதை வெளித்தள்ளுதல் எனப் பொருள்படும்,

**3. பொதுப்பணியிடங்களை அல்லது பொதுப் பயன்பாட்டிற்கான இடங்களை விளம்புதல்.–** அரசானது அறிவிக்கையின் வாயிலாகத் தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள பொதுப்பணியிடம் அல்லது பொதுப்பயன்பாட்டிற்கான இடம் எதனையும், இந்தச் சட்டத்தின் நோக்கத்திற்கான இடம் என விளம்பலாம்.

**4. பொதுப்பணியிடத்திலும் பொதுப்பயன்பாட்டிற்கான இடத்திலும் புகைப்பிடித்தலும் எச்சில் உமிழ்தலும் தடை செய்யப்படுதல்.–** பொதுப்பணியிடம் அல்லது பொதுப்பயன்பாட்டிற்கான இடம் எதிலும் நபர் எவரும் புகைப்பிடித்தலோ எச்சில் உமிழ்தலோ கூடாது.

**5. பொதுமக்கள் சேவைக்கான ஊர்தியில் புகைப்பிடித்தலும் எச்சில் உமிழ்தலும் தடைசெய்யப்படுதல்.–** 1988ஆம் ஆண்டு இயக்கூர்திகள் சட்டத்தின் (மையச் சட்டம் 59/1988) வகை முறைகளுக்கு உட்பட்டு, பொதுமக்கள் சேவைக்கான ஊர்தி எதிலும் நபர் எவரும் புகைப்பிடித்தலோ அல்லது எச்சில் உமிழ்தலோ கூடாது.

**6. புகைப்பிடித்தல் மற்றும் புகையிலை சுவைத்தல் குறித்த விளம்பரம் தடைசெய்யப்படுதல்.–** அப்போதைக்கு நடைமுறையிலுள்ள பிற சட்டம் எதிலும் என்ன அடங்கியிருந்தபோதிலும், பொதுப்பணியிடம் அல்லது பொதுப்பயன்பாட்டிற்கான இடம் எதிலும் மற்றும் பொதுமக்கள் சேவைக்கான ஊர்தி எதிலும் புகைபிடித்தலை அல்லது புகையிலை, பான்மசாலா அல்லது குட்கா அல்லது புகையிலைத் தயாரிப்பு எதையும் அல்லது வேறுபெயர் எதனாலும் அது வகைப்படுத்தப்படுமானாலும் கூட, புகையிலை உள்ளடக்கிய தயாரிப்புகள் எவற்றையும் சுவைப்பதை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நுகரத் தூண்டுகின்ற பொருள் எதனையும், நபர் எவரும்

விளம்பரப்படுத்துதலோ அல்லது விளம்பரப்படுத்துமாறு செய்வித்தலோ கூடாது.

**7. சிகரெட் முதலானவற்றைச் சேமித்து வைத்தல், விற்பனை செய்தல், பங்கீடு செய்தல் ஆகியன தடைசெய்யப்படுதல்.–** நபர் எவரும் , தாமாகவோ அல்லது அவர்தம் சார்பாக நபர் எவருமோ கல்லூரி, பள்ளி அல்லது பிற கல்வி நிலையங்கள் எவற்றையும் சுற்றியுள்ள நூறு மீட்டர் பரப்பிடம் ஒன்றிற்குள்ளாக சிகரெட்டுகள், பீடிகள், சுருட்டுகள், புகையிலையுடனான சுப்பாரி, ஜர்தா, மூக்குப்பொடி அல்லது அத்தகைய பிற புகையிலை அடங்கியுள்ள புகைக்கும் பொருள் அல்லது சுவைக்கும் பொருள்கள் எவற்றையும் சேமித்து வைத்தலோ விற்றலோ அல்லது பங்கீடு செய்தலோ கூடாது.

**8. அறிவிப்புப் பலகையை நிறுவி காட்சிக்கு வைத்தல்.–** பொதுப்பணி இடத்தை அல்லது பொதுப்பயன்பாட்டிற்கான இடத்தைப் பொறுப்பில் கொண்டுள்ள நபர் ஒவ்வொருவரும், அவ்விடத்திற்கு உள்ளோ அல்லது வெளியிலோ கண்ணுக்குத் தெரியும்படி எடுப்பானதோர் இடத்தில், "புகைக்கக் கூடாத இடம்", "எச்சில் உமிழக்கூடாத இடம்" மற்றும் "புகைப்பதும், எச்சில் உமிழ்வதும் குற்றமாகும்" என்பதாக அறிவிக்கும் பலகை ஒன்றை எடுப்பாக நிறுவி காட்சிக்கு வைத்தல் வேண்டும்.

**9. பணத்தண்டம்.–** நபர் எவரும் ,–

(i) பிரிவுகள் 4, 5 அல்லது 8இன் வகைமுறைகளை மீறுகிறபோது, நூறு ரூபாய் வரையிலான தண்டத்தொகை விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்; மற்றும் இரண்டாம் அல்லது அதற்கு மேற்பட்ட குற்றச்செயலை பொருத்துஇருநூறு ரூபாய்க்கு குறையாத ஆனால் ஐந்நூறு ரூபாய் வரையில்

நீட்டிக்கப்படக்கூடிய தண்டத்தொகையுடன் தண்டிக்கப்படுதல் வேண்டும்;

(ii) பிரிவுகள் 6 அல்லது 7இன் வகைமுறைகளை மீறுகிறபோது, ஐந்நூறு ரூபாய் வரையிலான தண்டத்தொகை விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்; மற்றும் இரண்டாம் அல்லது அதற்கு மேற்பட்ட குற்றச்செயலை பொருத்து, மூன்று மாதங்கள் நீட்டிக்கக்கூடிய சிறைத்தண்டனையும் அல்லது குறைந்தளவு தண்டத்தொகையான ஐந்நூறு ரூபாயும் விதித்து ஆனால் அத்தண்டத்தொகை ஆயிரம் ரூபாய் வரையில் நீட்டிக்கப்படலாம் அல்லது இவை இரண்டும் விதித்தோ, தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**10. நபர் எவருக்கும் இந்தச் சட்டத்தின்படி செயலாற்றும் அதிகாரமளிக்க அரசுக்கு உள்ள அதிகாரம்.–** அரசானது, அறிவிக்கையின் வாயிலாக இந்தச் சட்டத்தின்படிச் செயலாற்றத் தகுதிவாய்ந்த ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கு அதிகாரம் அளிக்கலாம்.

**11. பிரிவு 10இன்படி அதிகாரம் அளிக்கப்பட்ட நபர் பொது ஊழியராதல் வேண்டும்.–** பிரிவு 10இன்படி, அதிகாரம் அளிக்கப்பட்ட நபர் ஒவ்வொருவரும், இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் (மையச் சட்டம் XLV 1860) பிரிவு 21இன் பொருளின்படி ஒரு பொது ஊழியராகக் கருதப்படுதல் வேண்டும்.

**12. மீறுபவர்களை வெளியேற்றும் அதிகாரம்.–** அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர் எவருமோ அல்லது

துணை ஆய்வாளரின் படிநிலைக்குக் குறையாத காவல்துறை அலுவலர் எவருமோ, இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எதனையும் மீறுகிற நபர் எவரையும், பொதுப் பணியிடத்திலிருந்தோ அல்லது பொதுப்பயன்பாட்டிற்கான இடத்திலிருந்தோ வெளியேற்றலாம்; மற்றும் பொதுமக்கள் சேவைக்கான ஊர்திஒன்றின் ஓட்டுநர் அல்லது நடத்துநர் எவரும், அப்பொதுமக்கள் சேவைக்கான ஊர்தியில், இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எதனையும் மீறுகிற நபர் எவரையும் அந்தப் பொதுமக்கள் சேவைக்கான ஊர்தியிலிருந்து வெளியேற்றலாம்.

13. **குற்றச்செயல்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுதல்.–** நீதிமன்றம் எதுவும், பிரிவுகள் 4,5,8இன் படியான குற்றச்செயல்களைப் பொறுத்த அளவில் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரின் எழுத்துருவில் செய்துகொள்ளப்பட்ட முறையீடு ஒன்றின் பேரில் அல்லாமலும் மற்றும் பிரிவுகள் 6, 7இன்படியான குற்றச்செயல்களைப் பொறுத்தவரையில் துணை ஆய்வாளரின் படிநிலைக்குக் கீழல்லாத காவல்துறை அலுவலர் ஒருவரின் எழுத்துவடிவிலான அறிக்கை ஒன்றின் பேரில் அல்லாமலும், சட்டத்தின்படியான குற்றச்செயல் எதனையும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளக்கூடாது.

14. **இந்தச் சட்டத்தின்படியான குற்றச்செயல்கள் சுருக்கு முறையில் விசாரணை செய்யப்படுதல் வேண்டும்.–** இந்தச் சட்டத்தின்படியான குற்றச்செயல்கள் அனைத்தையும், 1973ஆம் ஆண்டு குற்ற விசாரணைமுறைத் தொகுப்புச் சட்டத்தின்படி (மையச் சட்டம் 2/1974) சுருக்கமுறை விசாரணைக்கு வகை செய்யப்பட்ட விதத்தில் சுருக்கமான முறையில் வழக்கு விசாரணை செய்யப்படுதல் வேண்டும்.

**15. அதிகார ஒப்படைவு.–** அரசானது, அறிவிக்கையின் வாயிலாக, இந்தச் சட்டத்தின்படி அதனால் செலுத்தப்படக் கூடிய, பிரிவு 18இன் கீழ் விதிகளைச் செய்வதற்கான அதிகாரம் நீங்கலான, அதிகாரம் எதுவும் அதில் குறிப்பிடக்கூடிய அத்தகைய அலுவலரால், அதில் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் எவையேனும் இருப்பின், அத்தகைய நிபந்தனைகளுக்கு உட்பட்டுச் செலுத்தப்படலாம் எனப் பணிக்கலாம்.

**16. குற்றச்செயல்களை இணக்கமாகத் தீர்த்தல்.–** இந்தச் சட்டத்தின்படியாகவோ அல்லது அதன் கீழோ, தண்டிக்கத்தக்க குற்றச்செயல்கள் எவற்றையும் நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு முன்னரோ அல்லது பின்னரோ, அரசு அல்லது அதனால் இதன்பொருட்டு அதிகாரம் அளிக்கப்பட்ட நபர் எவரும், இதுகுறித்த பொது அல்லது தனி ஆணையின் வாயிலாகக் குற்றச்செயல்கள் எவற்றையும் இணக்கமாகத் தீர்த்துக்கொள்ளலாம்.

**17. நிறுமங்களால் செய்யப்படுகின்ற குற்றச்செயல்கள்.–** (1) இந்தச் சட்டத்தின்கீழ் ஒரு குற்றச்செயல் ஒரு நிறுமத்தால் செய்யப்பட்டிருந்து, அக்குற்றச்செயல் செய்யப்பட்ட காலத்தில் அந்நிறுமத்தின் அலுவலை நடத்தி வருவதில் அந்நிறுமத்தைத் தம் பொறுப்பில் கொண்டிருந்தவரும், அதற்குப் பொறுப்பாய் இருந்தவரும் மற்றும் அதோடுகூட அந்த நிறுமமும், அக்குற்றச்செயலைத் செய்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதோடு அதன்படியே மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவதற்கு உள்ளாதலும் வேண்டும்:

**வரம்புரை**: இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும், அத்தகைய நபர் எவரும், அக்குற்றச்செயலானது தமக்குத் தெரியாமலேயே செய்யப்பட்டிருக்கின்றது என்றோ

அல்லது அக்குற்றச்செயல் செய்யப்படுவதைத் தடுப்பதற்கான உரிய முயற்சி அனைத்தையும் தாம் மேற்கொண்டார் என்றோ அவர் மெய்ப்பிப்பாரானால், இந்தச் சட்டத்தில் வகைசெய்யப்பட்டுள்ள தண்டனை எதற்கும் அவரை உள்ளாக்காது.

(2). உட்பிரிவு (1)இல் என்ன அடங்கியிருந்தபோதிலும், இந்தச் சட்டத்தின்படியான குற்றச்செயல் ஏதேனும் நிறுமத்தால் செய்யப்பட்டிருந்து, அந்த குற்றச்செயலானது, அந்நிறுமத்தின் இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் எவரொருவரின் இசைவுடனோ, மறைமுக ஆதரவுடனோ செய்யப்பட்டிருக்கின்றது அல்லது அவருடைய அசட்டை எதனாலும் செய்யப்பட்டது எனச் சாட்டத்தக்கதாக இருக்கின்றது என மெய்ப்பிக்கப்படும்போது, அத்தகைய இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் மீது அதன்படியே மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர் தண்டிக்கப்படுவதற்கு உள்ளதாலும் வேண்டும்.

**விளக்கம்**.– இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக,–

(a) "நிறுமம்" என்றால், கூட்டு நிறுவனம் என்று பொருள்படுவதோடு நிறுவகம் அல்லது பிற தனி நபர்களின் சங்கத்தையும் உள்ளடக்கும்; மற்றும்

(b) "இயக்குநர்" என்றால், ஒரு நிறுவகம் தொடர்பாக அந்த நிறுவகத்தின் கூட்டாளி எனப் பொருள்படும்.

**18. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.–** (1) அரசு, அறிவிக்கை வாயிலாக இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையுமோ அல்லது அவற்றில் எதையுமோ நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2) (a) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்படும் விதிகள் அனைத்தும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்று வெளிப்படையாகச் சொல்லப்பட்டாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்படும் நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்படும் அறிவிக்கைகள் அனைத்தும் அவை குறிப்பிட்ட நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்று வெளிப்படையாகச் சொல்லப்பட்டால் அன்றி, அவை வெளியிடப்படும் தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்படி செய்யப்படும் விதி ஒவ்வொன்றும் அல்லது பிறப்பிக்கப்படும் அறிவிக்கை ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர், கூடியவிரைவில், சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அது அவ்வாறு வைக்கப்படும் கூட்டத்தொடரோ அதையடுத்து வரும் கூட்டத்தொடரோ முடிவடைவதற்கு முன்னர், அத்தகைய விதி அல்லது அறிவிக்கை எதையும் அப்பேரவை மாற்றியமைக்குமாயின் அல்லது அந்த விதியோ அல்லது அறிவிக்கையோ செய்யப்படவோ அல்லது பிறப்பிக்கப்படவோ கூடாது என்று அப்பேரவை முடிவு செய்யுமானால், அதன் பின்பு, அந்த விதியோ அல்லது அறிவிக்கையோ அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே செயல்வடிவம் பெறுதல் வேண்டும் அல்லது நிகழ்விற்கேற்ப, செயல்வடிவம் பெறாது போதல் வேண்டும்; எனினும், அத்தகைய மாற்றம் அல்லது அழித்தறவு எதுவும், அந்த விதியின்படியோ அல்லது அறிவிக்கையின்படியோ முன்னதாகச் செய்யப்பட்ட ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.